# 23

# உத்தரவு

கூர்க்கா ஜங் பகதூர் தன் முன் வந்து நின்ற விதம் சரியில்லை என்று முத்துகிருஷ்ணனுக்குத் தோன்றிற்று. "என்ன?' என்று கேட்டான். தோட்டத்து வெளிச் சுவரையொட்டி இருந்த அந்தச் சிறு அறையில் ஒழுங்கான மின்விசிறி கூடக் கிடையாது.

"ஒரு வண்டிகூட உள்ளே விடக் கூடாதுன்னுதானே சார் சொன்னீங்க?"

"ஆமாம். உள்ளே ரிக்கார்டிங் ஆரம்பமாயிடுத்து."

"அப்படித்தான் சார் சொன்னேன். ஆனா அவுங்க ரொம்பக் கோபமாத் திரும்பிப் போயிட்டாங்க."

"யாரு?"

"எனக்குத் தெரியாது சார். வெள்ளை வண்டி."

"யார் இருந்தாங்க?"

"தெரியலை சார். ரொம்பப் பேர் இருந்தாங்க."

"சரி, போ. கேட்டிலேயே நில்லு."

முத்துகிருஷ்ணன் மீண்டும் பெட்ரோல் கணக்கில் மூழ்கினான். முந்தின தினம் வாங்கிய இருபத்தேழு லிட்டரில் ஐந்துக்குக் கணக்கு தெரியவில்லை.

கந்தசாமி ஓடி வந்தான். "சார், உங்களை ஆபீசர் கூப்பிடறாரு."

"பத்து நிமிஷம் கழிச்ச வரேன்னு சொல்லு, போ."

"ரொம்பக் கோபமாயிருக்காரு, சார். உடனே வரச் சொன்னாரு, சார்."

முத்துகிருஷ்ணன் மானேஜர் அறைக்குப் போனான்.

"என்ன எம்.கே? இங்கே வேலைக்கு வந்து ஒரு வருஷமாவுது, உங்களுக்கு இன்னும் ரம்யா வண்டி தெரியாதா? அவளை கேட்டிலேருந்து திருப்பி அனுப்பிச்சிட்டீராமே?"

"நான் அனுப்பலியே?"

"ரோடிலேருந்தே போ போன்னிட்டீராம். அவ அம்மா வீட்டிலேருந்து போன்லே லபோலபோன்னு கத்தறா."

"வெள்ளைக் காரா?"

"வெள்ளையோ கறுப்போ திருப்பி அனுப்பிச்சிட்டீராம். இப்போ பன்னெண்டு மணிக்கு முதல் ஷாட் இருக்கு. அவ வர மாட்டேங்கறா."

"நீங்கதான் வண்டி ஒண்ணையும் உள்ளே விட வேண்டாம்னு சொன்னீங்க."

"ஹீரோயின் வண்டியை விட வேண்டாம்னு யாருய்யா சொன்னான், போய்க் கால்லே கைலே விழுந்து அழைச்சிண்டு வாரும்."

முத்துகிருஷ்ணன் அறைக்கு வெளியே வந்தான். பகல் சாப்பாடு எடுத்து வர பிரைவேட் டாக்ஸி காத்திருந்தது.

"வாங்க, பழனிச்சாமி. ஒரு டிரிப் அண்ணாமலைபுரம் போயிட்டு வருவோம்."

"புகாரிக்குன்னா போகணும்னாங்க?"

"அது அப்புறம். முதல்லே ரம்யா வீட்டுக்குப் போங்க."

ரம்யா வீடு அண்ணாமலைபுரம் இரண்டாவது தெருவில் இருந்தது. முன் வரவேற்பு ஹாலிலேயே ரம்யாவின் அம்மா வெற்றிலை பாக்கு மென்றபடி உட்கார்ந்திருந்தாள். "யாரு நீ?" என்று முத்துகிருஷ்ணனைக் கேட்டாள்.

"ஸ்டுடியோவிலே ஷாட்டுக்கு எல்லாம் ரெடியாயிருக்காம். ரம்யாவை அழைச்சிட்டு வரச் சொன்னாங்க."

"என்ன என்ன?"

"ரம்யாவை அழைச்சிட்டு வரச் சொன்னாங்க."

ரம்யாவின் அம்மா முத்துகிருஷ்ணனை ஏற இறங்கப் பார்த்தாள். "நீ தானே கேட்லே விட வேண்டாம்னு சொன்ன ஆளு?"

"அது..."

"ஏய்யா, முதல் முதல் ஷூட்டிங்னு பாப்பா பூஜை எல்லாம் பண்ணிட்டுக் கிளம்பியிருக்கு. நீ சனியன் பிடிச்சவன் மாதிரி ரோடிலேருந்து வண்டியைத் திருப்பி அனுப்பிச்சிருக்கியே?"

"அந்த கூர்க்கா புதுசும்மா. தெரியாம செஞ்சிட்டான்."

"தெரியாம செஞ்சேன்னா சும்மா வுட்டுடுவாங்களா? போ, போ. உங்க முதலாளியை அழைச்சிட்டு வா, போ!"

"இதுலே முதலாளிக்கு என்னம்மா இருக்கு?"

"என்ன இருக்கா? நேத்தெல்லாம் இங்கு இருந்துப் பேசிட்டுப் போயிருக்காரு, நீ தெருவுலேருந்தபடியே எங்களைத் திருப்பி அனுப்பிச்சிருக்கியே? எங்களுக்கு எல்லாம் மானம் ரோஷம் இல்லையா?"

"ஏதோ தெரியாம நடந்துடுத்தும்மா. அந்தக் கூர்க்காவை வீட்டுக்குப் போகச் சொல்லியாச்சு."

"கூர்க்கா இருந்தா என்ன, போனா என்னய்யா? இது மட்டும் பத்திரிக்கைகாரங்களுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும்? பாப்பாவை அவமானப்படுத்தி அனுப்பிச்சாங்கன்னுதானே பத்தி பத்தியாகப் போடுவாங்க?"

"இது யாருக்கும் தெரியாதும்மா. தப்பு எங்களுதுதான். மணி பன்னெண்டாவதும்மா. எல்லாரும் காத்திருட்டிருக்காங்க."

"இருக்கட்டும்யா! அந்தக் குழந்தை மனசு எப்படி உடைஞ்சு போயிடுத்து தெரியுமா? அழுது அழுது மூஞ்சி வீங்கிப் போச்சுய்யா! அது எப்படிய்யா காமிரா முன்னாலே நிக்கும்?"

"அம்மா, அம்மா! பெரிய மனசு பண்ணுங்க. நானே கேட்டிலே நிக்காதது என் தப்புத்தான்."

அந்த அம்மாள் மேற்கொண்டு பேசாமல் எழுந்து உள்ளே போனாள். முத்துகிருஷ்ணன் அந்த ஹாலை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். மூடிய மூன்று நான்கு கதவுகளில் எது ரம்யாவின் அறையாக இருக்கும்? ஆள்காட்டி விரலால் ஒரு கதவைத் தள்ளினான். அது திறந்து கொண்டது. உள்ளே ரம்யா படுத்தி

ருந்தது தெரிந்தது. முத்துகிருஷ்ணன் கதவை முழுசாகத் திறந்து உள்ளே போனான். எங்கிருந்தோ ரம்யாவின் அம்மாவின் குரல் 'யோவ்! யோவ்!' என்று கேட்டது. முத்துகிருஷ்ணன் ரம்யாவின் கட்டிலருகே நின்றான். அவள் நிஜமாகவே அழுதிருந்தாள்.

"பார்வதி."

"ரம்யா திடுக்கிட்டு முத்துகிருஷ்ணனைப் பார்த்தாள். பரபரத்து உட்கார்ந்து கொண்டாள்.

"எழுந்து வா. என்னோட இந்த வேலைக்கும் வேட்டு வைக்காதே."

ரம்யா கட்டிலை விட்டிறங்கி நின்றாள்.

'நான் இப்போ செட்டியார் கிட்டேதான் வேலை பார்க்கிறேன்."

"அம்மா கூட நீங்கதான் பேசிண்டிருந்தீங்களா, மாஸ்டர்? ஐயோ, அப்பவே தெரியாம போயிடுத்து."

"பரவாயில்லே. எல்லா விதமான அபராதமும் கஷ்டமும் வந்தாச்சு. இந்த சினிமாக் கம்பெனிதான் ஆறு மாசமா சோறு போடறது."

ரம்யா தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

"என் மகன் பாலு இப்போ இந்த ஊர்லியேகூட இல்லே, தெரியுமா உனக்கு?"

ரம்யா தலையை நிமிர்த்தவில்லை.

"உங்க அம்மா ஸ்கூல் கரஸ்பாண்டண்ட் கிட்டே பண்ணின ரகளைக்கப்புறம் அவன் ஓடியே போயிட்டான். போன மாசந்தான் எனக்குத் தகவல் கிடைச்சுது. அவன் தூத்துக்குடியில் ஒரு டீக்கடையில் இருக்கானாம்."

ரம்யா கால் கட்டை விரலைத் தரையில் தேய்த்த வண்ணம் நின்றிருந்தாள்.

"அதெல்லாம் கூட நல்லதுக்குத்தான்னு இப்போ தோணறது. நீ என் வீட்டு மருமகளா வந்திருந்தா சினிமா ஸ்டாரா ஆயிருக்க முடியுமா?" தனக்குப் பின்னால் வாசற்படியில் ரம்யாவின் அம்மா நின்று கொண்டிருப்பதை முத்துகிருஷ்ணன் உணர முடிந்தது.

"நானே இப்பதான் உங்க அம்மாவைப் பார்த்தேன். அவளுக்குத் தெரியாது, அவ ஏற்கெனவே ஒரு தடவை என் வேலையைப் போக்கடிச்சான்னு. இப்போ இன்னொரு தடவை யும் என் வேலை போகப் போறது."

ரம்யா உள்ளங்கையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். "வாங்க மாஸ்டர், போவோம்" என்றாள்.

முத்துகிருஷ்ணனும் அவளும் அவளுடைய அம்மாவைக் கடந்து வந்தார்கள். "எங்கேடி போறே?" என்று அம்மா கேட்டாள்.

"ஸ்டுடியோவுக்கு."

"இப்பத்தானேடி போகவேண்டாம்னு சொன்னே?"

ரம்யா முத்துகிருஷ்ணனைக் கேட்டாள், "வண்டி கொண்டு வந்திருக்கீங்களா?"

"இருக்கு."

"அதைப் போகச் சொல்லுங்க. நம்ம வண்டியிலேயே போயிடுவோம்."

ஜங் பகதூர் இம்முறையும் காரை நிறுத்தினான். ஆனால் முத்துகிருஷ்ணனும் வண்டியில் இருப்பதைப் பார்த்துவிட்டு கேட்டை நன்கு திறந்தான்.

"இவனை முதல்லே வீட்டுக்குப் போகச் சொல்லுங்க" என்று ரம்யாவின் அம்மா சொன்னாள்.

முத்துகிருஷ்ணன் பதில் சொல்லவில்லை. ரம்யாவின் முகம் மட்டும் ஒருமுறை அழுவதற்குத் தயாரான மாதிரி இருந்தது.

1984

## 24

# பங்கு

தலை தீபாவளிக்கு ஊருக்கு அண்ணா, மன்னியுடன் லலிதாவும் போவதாக முடிவாயிற்று. மன்னியின் பெயரும் லலிதாதான்.

'லலிதா!' என்று கூப்பிட்ட குரலுக்கு இருவர் பதில்கொடுப்பதில் அம்மாவுக்கு மிகவும் சந்தோஷம்தான். ஆனால் மன்னி வீட்டுக்கு வந்தவுடன் முதல் மாறுதல் இந்தப் பெயர் விஷயத்தில்தான் நிகழ்ந்தது. அண்ணாதான் முடிவெடுத்தான். மன்னியின் பெயரைக் கூப்பிடும் அளவிலாவது மாற்ற வேண்டும். என்ன புதுப் பெயர் வைப்பது? அம்மா காமாட்சி என்றாள். அண்ணா பத்மினி என்றான். லலிதாவுக்கு முதலில் இந்தப் புதுப் பெயரின் காரணம் தெரியவில்லை. அப்புறம்தான் தெரிந்தது. ஒரு காலத்தில் தமிழ்த் திரையுலகத்தில் லலிதா, பத்மினி என்று இரு சகோதரிகள் கொடி கட்டிப் பறந்தார்கள் என்று. மன்னி பெயரைப் பத்மினி என்று கூடக் கூப்பிடாமல் பப்பி என்று அண்ணா அழைக்க ஆரம்பித்தான்.

அவன் வாங்கி வந்த இரயில் டிக்கெட்டுக்களை லலிதா வாங்கிப் பார்த்தாள். ஒன்று அண்ணாவுடையது. அடுத்தது பத்மினியுடையது. மூன்றாவது அவளுடையது. தனித்தனி டிக்கெட்டுக்களை எப்படி வேண்டுமானாலும் வரிசைப்படுத்திக் கொள்ளலாம், ஆனால் அண்ணா ரிசர்வேஷன் விண்ணப்பத்தில் என்ன வரிசையில் எழுதியிருப்பான் என்று எண்ணிப் பார்த்த போது லலிதாவுக்கு ஒரு கணம் மனம் சுருங்கியது.

தீபாவளி காலமாதலால் இரயில் பெட்டிகள் நிரம்பியிருந்தன. மூவராக ஊருக்குக் கிளம்புவதாக இருக்கக் கூடாது என்று தம்பியும் ஸ்டேஷன் வரையில் வந்தான். இரயிலில் இடம் கண்டு பிடித்துச் சாமான்களை ஏற்றியவுடன் அண்ணா அவனைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

இரண்டாம் வகுப்பில் மூன்றடுக்குப் படுக்கை வண்டி. மூன்று பேருக்கும் ஒரே பிரிவில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. கீழ் பெஞ்சில் மூவரும் உட்கார்ந்தார்கள். லலிதா ஜன்னல் பக்கம் போய் உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் மன்னி. அவளுக்குப் பக்கத்

தில் அண்ணா. இரயிலில் ஏறியதிலிருந்து மன்னி உஸ் புஸ்ஸென்று புடவைத் தலைப்பினால் தன்னை விசிறிக் கொண்டிருந்தாள்.

எதிர் பெஞ்சில் இரு சிறு குழந்தைகள் கொண்ட ஐவர் குடும்பம். மன்னியின் பக்கம் ஒரு மின்சார விசிறியைத் திருப்ப முடியுமாவென்று அண்ணா முயன்று பார்த்தான். ஆனால் விசிறிகள் ஒரே நிலையில் இருக்கும்படியாகப் பொருத்தப் பட்டவை.

"லலிதா, நீ இந்தப் பக்கம் வந்து உக்காரேன். மன்னியை ஜன்னலுக்கு விட்டுடு!" என்று அண்ணா சொன்னான். லலிதா எழுந்திருக்க மன்னி ஜன்னலருகில் நகர்ந்தாள். அவளுடன் அண்ணாவும் நகர்ந்தான். லலிதா பெஞ்சு கோடியில் உட் கார்ந்தாள்.

இரயில் கிளம்பியது. உடனேயே எதிர் வரிசைக் குடும்பம் உணவு மூட்டையைப் பிரிக்கத் தொடங்கியது. லலிதாவுக்குப் பசிப்பது போலிருந்தது. "நம்பளும் சாப்பிட்டுடலாமா?" என்று அண்ணாவைக் கேட்டாள். மன்னி முந்திக் கொண்டு, "எட்டு மணியாவது ஆகட்டுமே" என்றாள். வீட்டில் இரவுச் சாப்பாடு எட்டு எட்டரைக்குத்தான் துவங்கும். ஆனால் இரயிலில் ஏழு மணிக்கு லலிதாவுக்குப் பசித்தது.

இரயில் இருளைக் கிழித்துக்கொண்டு விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. அந்த இருட்டிலும் அண்ணா ஜன்னல் வழியாக மன்னிக்கு எதை எதையோ சுட்டிக்காட்டி விளக்கிக் கொண்டி ருந்தான். அவளும் அதை மிகவும் ரசித்தபடி தோற்றம் கொண்டி ருந்தாள். உண்மையில் அவளை அவன் நெருக்கியடித்து உட் கார்ந்ததுதான் அந்த மலர்ச்சியை உண்டு பண்ணி இருக்க வேண்டும்.

அவனுக்கும் லலிதாவுக்கும் இடையில் நிறைய இடைவெளி இருந்தது. லலிதா அப்படியே காலை மடக்கிக் கொண்டு படுத்து விடலாம் என்றுகூட எண்ணினாள். ஆனால் எதிர் வரிசைக் குடும்பத்தின் குழந்தை ஒன்றை எதிர் வரிசைக்காரர் அங்கு உட்— கார வைத்தார். லலிதா உட்கார்ந்தபடியே தலையைப் பின்னால் சாய்த்துக் கண்களை மூடிக்கொண்டாள்.

செவி மட்டும் செயல்படும்போதுதான் ஒரே நேரத்தில் இவ்வளவு ஒலிகள் எழுப்பப்படுகின்றன என்று லலிதாவுக்கு உணர முடிந்தது. அவள் பார்வை எட்ட முடியாத அந்தப் பெட்டியின் பிற இடங்களில் கூட நிறையப் பேர் பேசிக் கொண்டிருப்பதை அவளால் தெரிந்துகொள்ள முடிந்தது. கூரையில் பொருத்தி வைக்கப்பட்ட விசிறிகள் ஒவ்வொன்றும் ஒரு மாதிரியாகச் சப்தம் எழுப்பின. இதெல்லாவற்றுக்கும் பின்னணியாக இரயிலோட்டத்தின்

சப்தம். அண்ணாவும் மன்னியும் விடாது பேசிக் கொண்டிருந்தார்கள். நடு நடுவில் மன்னியின் சிரிப்பொலியும் கேட்கும்.

அண்ணா வேடிக்கையாகப் பேசக்கூடியவன்தான். அவர்கள் குடும்பத்தில் இரயில் பயணம் நேரும் போதெல்லாம் அவனும் லலிதாவும்தான் சேர்ந்து உட்காருவார்கள். அவனுக்கு அவளிடம் பேச அவ்வளவு விஷயங்கள் இருந்தன. அவளாலும் அவனைத் தொடர்ந்து பேச வைக்கக்கூடிய வகையில் அவன் பேசும் விஷயங் களிலும் கலந்துகொள்ள முடிந்திருக்கிறது. அவள் வாய் விட்டுச் சிரிக்கமாட்டாள். அதே நேரத்தில் அவன் பேச்சிலுள்ள நகைச்சுவை என்றும் அவளிடமிருந்து நழுவிப் போனதில்லை. அதுவே அண்ணாவை இன்னும் அதிகமாகவும் புதுமையாகவும் பே—சவைக்கும். இப்போது அந்த அண்ணாவுக்கு அவளிடம் பேச எதுவுமே இல்லாது போயிருந்தது. இரயிலில் ஏறியதிலிருந்து 'ஜன்னல் பக்கத்தை மன்னிக்குக் கொடுத்து விடு' என்று மட்டுந் தான் பேசத் தோன்றியிருக்கிறது.

மன்னிக்கும் பசி வந்துவிட்டது என்று எண்ணும்படி அவளே அண்ணாவிடம், "இப்ப சாப்பிடறேளா, இன்னும் கொஞ்சம் நாழியாகட்டுமா?" என்று கேட்டாள். அவன் என்ன பதில் சொன்னான் என்று கண்ணை மூடிக் கொண்டிருந்த லலிதாவுக்குத் தெரியவில்லை. மன்னி டிபன் கேரியரைத் திறக்கும் சப்தம் கேட்டது. லலிதா கண்ணைத் திறந்தாள்.

மன்னி டிபன் கேரியர் மூடியில் உணவு எடுத்து வைத்து லலிதாவிடம்தான் முதலில் கொடுத்தாள். அவன் முறைக்காக அண்ணாவும் காத்திருந்தான். ஒரு டிபன் காரியர் தட்டை ஒரு மாதிரி காலி செய்து அதில் அண்ணாவுக்குச் சாப்பாடு தந்தாள். லலிதாவும் அண்ணாவும் சாப்பிடத் தொடங்கினார்கள். அண்ணா லலிதா பக்கம் திரும்பி, "ஏன் ஒரு மாதிரி இருக்கே? உடம்பு ஏதாவது சரியில்லையா?" என்று கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே" என்று லலிதா பதில் சொன்னாள்.

அண்ணா மன்னியைப் பார்த்து, "நீ சாப்பிடலயா?" என்று கேட்டான்.

"நீங்க முதல்லே முடிங்கோ" என்று மன்னி சொன்னாள். அண்ணா மன்னிக்குச் சற்று அதிகமாகவே பணிந்து போவது போல லலிதாவுக்குத் தோன்றியது. அவன் மறுபேச்சு பேசாமல் சாப்பிட்டான்.

பசி அடங்கியதில் லலிதாவுக்கு உற்சாகம் திரும்பியது. அவள் அண்ணாவுடன் பேசக் காத்திருந்தாள். பேசி முடிவெடுக்க வேண்டிய காரியம் ஒன்றும் கிடையாது. என்றாலும் அவளுக்கு

ஏதாவது பேச வேண்டும் என்றிருந்தது. ஆனால் மன்னியும் அவள் உணவை முடித்துக் கொண்டவுடன் அண்ணா படுக்கையை தயார் செய்ய ஆரம்பித்து விட்டான். கீழ் அடுக்கில் மன்னி, நடு அடுக்கில் லலிதா, அவன் மேலே மூன்றாவதிலும் ஏறிப் படுத்தும்விட்டான். இனி காலை ஆறு மணிவரை அவர்கள் யாவரும் படுத்தபடியேதான் இருக்க வேண்டும். மூன்றடுக்குப் படுக்கை வண்டியில் யாவரும் படுத்தபடி இன்னொருவருடன் பேச முடியாது.

எதிர் வரிசைக் குடும்பமும் ஒரு மாதிரி தூக்கத்துக்கு ஆயத்தமாகிவிட்டது. லலிதா தூங்க முயலவில்லை. வீடு வரையில், மன்னி வந்து சேர்ந்தது சில மேலோட்டமான மாறுதல்களைத் தான் செய்திருந்தது. ஆனால் இந்த இரயில் பயணத்தின்போது தான் அந்த மாறுதல்களின் பரிமாணங்களை அதிகமாக உணர முடிந்தது. உடைமைகளைப் பகிர்ந்து கொள்வதைவிட உடன் பிறந்தவனைப் பகிர்ந்து கொள்வது எவ்வளவு சிரமமான காரியம் என்று தெரிந்தது.

லலிதா படுத்தபடியே தலையை நீட்டித் தன் மன்னியை எட்டிப் பார்த்தாள். நாளெல்லாம் உழைத்துக் களைப்புற்றதை அவள் தூங்குவதில் நன்கு காண முடிந்தது. வீட்டு மருமகளாக ஒருத்தி வந்து விட்டால் எப்படியோ அந்த வீட்டு வேலைகளை அதிகரித்து விடுகின்றன. அவற்றில் பெரும் பகுதி அந்த மருமகள் தலையில் விழுந்து விடுகிறது.

லலிதாவுக்கு அவள் புகப்போகும் வீடு எப்படி இருக்கும் என்று எண்ணத் தோன்றியது. மன்னியும் அவள் திருமணத்திற்கு முன்பு எப்படியெல்லாம் நினைத்திருப்பாளோ? ஆனால் இப்போது அவளுடைய எதிர்பார்ப்புகள் எல்லாம் பூர்த்தி அடைந்த மாதிரி தான் நடந்து கொள்கிறாள். உண்மையிலேயே அப்படித்தானா?

லலிதா அவள் பார்த்த தமிழ் சினிமா எல்லாவற்றிலும் ஏதாவது ஓரிடத்தில் பெண் மனதைப் பெண்தான் அறிய முடியும் என்று வசனம் பேசப்பட்டதை நினைத்துக் கொண்டாள். அவளுக்கு அவளுடைய மனதையே அறிய முடியவில்லை. இதே மன்னியை ஒரு சமயம் பார்க்கும்போது எரிச்சல் வந்தது. இன்னொருமுறை பச்சாதாபம் மேலிட்டது. ஆனால் ஒன்று மட்டும் ஒருவாறு புலனாயிற்று. யாரோ ஒருவருடைய சுக சௌகரியத்தைப் பறிக்காதபடி கல்யாணமே சாத்தியமில்லை.

அவளுக்கு அந்த நேரத்தில் கல்யாணமே வேண்டாம் என்றுதான் எண்ணத் தோன்றியது.

1984